தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 13 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 18-5-57 | சனிக்கிழமை | இதழ் 35

அண்ணாவும் பெரியாரும்

பார்ப்பனர்கள்

"காமராசர் இரண்டாம் தடவையாக முதன் மந்திரியானதிலிருந்து அவர் கையாண்டு வரும் கொள்கையினால் திராவிடக் கழகமும், அதனுடைய தலைவர் ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் (காமராசருக்குப் புத்தி கூறுபவர் என்று தன்னைத்தானே கூறிக் கொள்கிறவர்) கலக்கம் அடைந்திருக்கிறார்கள் என்பதினால் காமராசரைக் குறைகூறுபவர்கள் சற்று நிம்மதியடைந்திருக்கிறார்கள்.

"காமராசரின், குறைந்தது மூன்று நடவடிக்கைகளினால் ஈ. வெ. ரா. அதிருப்தி அடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

"முதலில் ஆர். வெங்கட்ராமன் என்ற பார்ப்பனருக்கு அமைச்சரவையில் இடம் தந்தது; இம்மாகாணத்தின் மேல்சபைக்கு அவரைத் தலைவராக்கியது.

"இரண்டாவதாக, யு. கிருஷ்ணராவ் என்பவரை சட்ட நிர்மாண சபையின் சபாநாயகராக ஆக்கியது. இது ஈ. வெ. ராவின் அப்பழுக்கற்ற தமிழ் மாகாணக் கொள்கைக்கு முரணானது.

"யு. கிருஷ்ணராவ் ஒரு பார்ப்பனர் என்பது மட்டுமல்ல (பார்ப்பனர் என்ற வார்த்தையை தமிழ்த் தன்மையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது புகழத் தக்கதல்ல என்று சொல்லப்படுகிறது) பிறப்பில் அவர் கன்னடத்துக்காரர்.

"மூன்றாவதாக நிதி மந்திரி சி. சுப்ரமணியத்தை (ஈ. வெ. ரா. வினால் வெறுக்கப்படுபவர்) முன்பு அவர் இருந்ததுபோல தற்பொழுதும் அவரைச் சென்னை சட்ட நிர்மாண சபையின் தலைவராக அனுமதித்தது. சி. சுப்ரமணியத்தை விரும்பாதவர்கள், தற்சமயம் உள்ள சட்ட நிர்மாண சபைக்கு முன்னால் மேல் சபையின் தலைவராயிருந்தவரும் அமைச்சர்களில், அனுபவத்தில் முதன்மையான வருமான திரு. எம். பக்தவத்சலம் தலைவராக்கப்படுவார் என நம்பினார்கள். ஆனால், இந்தக் காரியத்தை சி. சுப்ரமணியத்திற்கு அனுசரணையாக திரு. காமராசர் தீர்மானித்துவிட்டார்.

"காமராஜ், தேர்தலை ஜெயித்த பின்பும் இம்மாகாணத்தின் அரசியல் தலைமையை எடுத்துக்கொண்ட பிறகும் தன் உயிர் சகாக்களுக்கு எல்லா முக்கியப் பதவிகளையும் கொடுத்துவிட்டாரென்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.

தி. மு. க.வின் சாதனை

"ஈ. வெ. ராவிடமிருந்து ஒளியைப் பெற்ற சி. என். அண்ணாதுரை தற்பொழுது தி. மு. க. சட்டசபைத் தலைவராக இருக்கிறார். ஆனால், ஈ. வெ. ரா. ஓட்டல் பெயர்ப் பலகைகளையும், தமிழ் அர்ச்சனையையும் மக்கள் கவனத்தை இழுக்க முக்கிய கருவிகளாக நம்பியிருக்கிறார். அண்ணாதுரை, தான் சட்டசபை செல்ல நினைத்தது சரி என்பதை நிரூபித்துவிட்டார். அவர் நிகழ்த்தும் ஒவ்வொரு சொற்பொழிவும் முழு சபையையும் (மந்திரிகள் உட்பட) சிந்திக்கத்தக்க முறையில் வசப்படுத்துகிறது.

"யு. கிருஷ்ணராவ் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவரை வரவேற்று அண்ணாதுரை நிகழ்த்திய முதல் சொற்பொழிவு வாக்குச் சாதுர்யத்தில் சிறப்புமிக்கது. அவரது அரசியல் ஏதுவாயினும் அந்த ஒரு பேச்சே தமிழ்ப் பண்பாட்டின் மேம்பாட்டிற்கு எடுத்துக்காட்டு. அப்போது தேவைப்பட்ட மரியாதை, பண்பாடு, எண்ணத் தெளிவு இவைகளை அவர் வெளிப்படுத்தினார்.

சென்னை சட்டசபையில் வாதங்களின் தரத்தை அண்ணாதுரை மிக அதிகமாக உயர்த்துவார் என்பது நிச்சயம்.

"மந்திரிகளும் பெரும்பாலான அங்கத்தினர்களும் தங்கள் பதவிப் பிரமாணத்தை தமிழிலேயே முதற் கூட்டத்தன்று எடுத்துக்கொண்டார்கள். இது, தமிழ்ப் புத்தாண்டன்று காமராசரும் அவருடைய மந்திரி குழாமும் ஆங்கிலத்தில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டதற்கு எதிரிடையாக அமைந்துவிட்டது. அங்கத்தினர்களில் ஒருவர் காந்தியின் பெயரால் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். ஆனால் தற்காலிகமாக இருந்த சபாநாயகர் அவரை மறுமுறை குறிப்பிட்ட முறையில் பிரமாணம் எடுத்துக்கொள்ளச் செய்துவிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர்

"சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வி. கே. ராமசாமி முதலியாருக்குக் கிடைத்துவிட்டது. முதலில் இது பதினாறு பேரின் பலத்தைக் கொண்ட கட்சியாக இருந்தபோதிலும் தன்னைப் பின்பற்றுபவர்களை சுயேச்சைகளிடமிருந்து பெற்றுக்கொண்டது. தற்போது இருபத்திரண்டு பேரின் பலத்தைக் கொண்டதாகப் பெருமை பாராட்டிக்கொள்கிறது. தி. மு. க. பதினைந்து பேரின் பலத்தைக் கொண்டது. மற்ற எதிர்க்கட்சிகள் மிக்க பலவீனமானவையாக இருக்கின்றன.

தலைவர் தேர்தல்

"மே 6-ந் தேதி நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலைப் பகிஷ்கரித்து தி. மு. க. சட்டசபைக் கட்சி தன் கருத்தைத் தெரிவிக்கிறது.

காரணங்கள்

"ஜனநாயக வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கின்ற முறையில் நாட்டின் உயர்ந்த பதவிக்கு மீண்டும் மீண்டும் ஒருவரையே நியமிப்பதை இந்தக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. உயர்ந்த பதவிக்கு ஒருவரையே தேர்ந்தெடுத்ததற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஜனாதிபதி தேர்தலுக்கு போட்டியிடும் மற்ற இரு அபேட்சகர்களும் பிற்போக்கான கட்சியைச் சார்ந்தவர்களாயிருக்கிறார்கள் என்று தான் கருதுவதால் கட்சி அவர்களிடம் அனுதாபமுடன் நடந்துகொள்ள முடியவில்லை.

"காமராசர் சர்க்காரின் தற்போதைய நடவடிக்கை தங்களுக்கு 'வருந்தத்தக்க குறுக்கீடு' என்று திராவிட கழகத்தினர் கருதுகிறார்கள்."

[பம்பாயிலிருந்து டி. எப். கராக்கா என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் பத்திரிகை 'கரண்ட்'. மே-எட்டாம் தேதி இதழில் இவ்வாறு தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறது. இந்தப் பத்திரிகை, உலகம் முழுவதும் சுற்றும் பத்திரிகைகளில் ஒன்று. பல அரசியல் அறிஞர்களால் போற்றிப் படிக்கப்படுவது. ★

கவிஞனும் காதலும்

கண்ணதாசன்

5

கவிஞனது கற்பனை நியாயம் உணர்ச்சி பாவத்தோடு ஒன்றுபடும்போதுதான் அவன் படைக்கும் உருவத்திற்கு உயிர் கிடைக்கிறது. வெறும் இலக்கணப் படிப்பின் மூலம் கவிதை எழுத முற்படுகிறவர்கள் கற்பனையிலும் உணர்ச்சி பாவத்திலும் ஒன்றுபடுவதில்லை. ஒன்றுபட்டு எழுதியவர்கள்தான் உயர்ந்த கவிஞர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

"குடிப்பேன், குடிப்பேன், குடித்துக் கூத்தாடுவேன்" என்று கும்மாளம் போட்டு மதுவையும் மாதரையும் பற்றிப் பாடிப் பாடித் தள்ளிய உமர்கய்யாம், சரியோ தவறோ, அந்த இரண்டுடனும் இரண்டறக் கலந்திருந்தான். மதுக் குடிப்பது பாபமாக இருக்கலாம். பல மாதரை இச்சிப்பது நிய செயலாய் இருக்கலாம். ஆனால், பல மாதர் சுகத்தையும் மதுவின் சுவையையும் பற்றிப் பாடுவதென்றால் அதற்கும் ஒரு ஒருப்பட்ட உணர்ச்சி வேண்டும். மதுக்கிண்ணத்தைக் கையிலே தூக்கி வைத்துக்கொண்டு அதன் விளிம்புகளிலே விழியைப் பதித்து, சாதாரணக் கிண்ணங்களுக்கு இல்லாத மரியாதை மதுக்கிண்ணத்திற்கு இருக்கிறதே என அதிசயித்து, விளிம்புக்கு விளக்கம் தேடி உவமை கண்டுபிடித்து, உள்ளேயிருக்கும் மதுவையும் பொன்வண்ண போகபூமி என வர்ணித்து கடைசிச் சொட்டு மதுவிலும் சாரம் இருக்கிறது என்று ரசித்து, கையில் இருந்தாலே ஆனந்தம் பிறக்கிறது என்று குதித்து, ஒவ்வொரு அணுவையும் அனுபவித்த பின்தான் அதைப் பற்றி முழுக்கப் பாடமுடிந்தது, உமர்கய்யாமினால். வள்ளுவனைப் போல் வாழ்க்கைக்குத் தேவையான நியாயங்களை அவன் தராவிட்டாலும், அவனைப் பெருங் கவிஞன் ஆக்கியது உணர்ச்சி பாவத்தோடு ஒன்றுபட்ட அவனது கற்பனை நியாயந்தான்.

படிக்கும்போது மெய்சிலிர்க்கிறது. மனம் பரவசப்படுகிறது. "பிரமாதம், பிரமாதம்" என்று சொல்லத் தோன்றுகிறது. "அனுபவித்து எழுதியிருக்கிறான் ஐயா" என்று பாராட்டுகிறோம். இந்தப் பாராட்டுதல் அவனுக்குக் கிடைப்பதற்குக் காரணம், அவன் தான் சொல்ல விரும்புகிற பொருளில் மூழ்கித் திளைத்த பின்பே அதைச் சொல்வதாலேதான்.

★

இன்றும் வாழுகிற ஒரு நல்ல கவிஞர், தமிழுலகிற்கு அவரைச் சரிவரத் தெரியாது. அவருக்கென ரசிகர் கூட்டம் உருவாகாத காரணத்தாலே குடத்து விளக்காக இருக்கிறார். நாட்டு விடுதலைப் பாடல்களிலே அதிக அக்கரை காட்டாததாலே விளம்பரமில்லாமல் இருக்கிறார். காலத்தோடு ஒட்டிக் கருத்தை மாற்றிக்கொள்ளாததாலே நாடு அவரை லட்சியம் செய்யவில்லை. ஆனாலும், காளி பக்தியில் ஊறிக்கிடக்கும் அவர் நல்ல கவிஞர். தெளிவான வார்த்தை ஓட்டமும் ஆழ்ந்த கருத்துக்களும் அவர் கவிதைகளில் காணக்கிடக்கும். 'கண்மணி ராஜம்' என்ற தலைப்பில் அவர் ஒரு கவிதை எழுதியிருக்கிறார். ராஜம் அவருடைய மகள். சிறு பெண். அவள் இறந்த துயரத்தில் பாடிய கவிதை அது. அந்தக் கவிதையின் ஒவ்வொரு வரியிலும் தந்தையின் துயரம் நிற்கிறது. தாளாத சோகம் புலம்புகிறது. வாழ்க்கையின் நெளிவுகள் வட்டமிடுகின்றன. கூட இருந்த காலத்தில் குழந்தையை அவர் கொஞ்சிய விதத்தை அவள் மாண்ட பின்னர் பாடிய அந்தக் கவிதை சுழித்துச் சுழித்துக் காட்டுகிறது. "ஏன் மறைந்தாய்? எதற்காக மறைந்தாய்?" என்று அவர் துடித்துக் கேட்கும் விதத்தில் குழந்தை மனதறியத் தன்னைவிட்டு மறைந்துவிட்டதாக ஒரு மயக்கம் தட்டுகிறது. "அப்பாவை இப்படி ஏமாற்றலாமா? இன்னும் கொஞ்ச காலம் நீ இருந்திருக்கலாமே?" என்று குழந்தையை நோக்கிச் சொல்லத் தோன்றுகிறது. "அப்பன் கஞ்சிக்கில்லாதவன் என்று ஓடி விட்டாய்?" என்று அவர் கேட்கும் போது சராசரி மனித இதயத்தில் கூட சுருக்கென்று ஒரு முள் பாய்கிறது. பின்னி முடித்துப் பேரழகு பார்த்து, கண்ணே என அழைத்து, கையிரண்டும் தூக்கி வைத்து, மார்பகத்தில் சேர்த்து மகிழ்வுற்ற காலமெல்லாம் படம் படமாக உருவாகிறது. குழந்தையிடம் எழுகின்ற அன்புணர்ச்சி தாய்க்கு இருக்கிற அளவு தந்தைக்கு இருக்காது என்பார்கள். ஆனால் கவிஞனுக்குத் தாயின் இதயம் அப்படியே இருக்கிறது. பத்து மாதம் சுமந்து தானே பெற்றதுபோல் கவிஞன் பரிதவிக்கிறான். தாயினுடைய கற்பனைக் கோட்டைகளை எல்லாம் தான் வைத்திருந்ததாகக் கதறுகிறான். மனிதன் கவிஞனானால் இதயம் அவ்வளவு இளகுகிறது. நெக்குருகி நெக்குருகிப் பாடுகிறது. புதிய புதிய கற்பனைகள் புற்றீசல்போல் புறப்படுகின்றன. அருகிலேயே வைத்து அன்பு செலுத்திய சொந்த மகள் இறந்ததால் **கவிஞர் யோகியாரின்** கற்பனை நியாயம் சோக உணர்ச்சி பாவத்தில் அவ்வளவு ஒன்றுபட்டு விடுகிறது.

அவரே "**அகலிகை**" என்றொரு சிறு காவியம் எழுதியுள்ளார். அதிலே தன்னை மறந்து பல கட்டங்களைப் பாடுகிறார். அகலிகையின் பேரழகிலே ஒன்றுகிறார். அவளுக்காக வாதாடுகிறார். அவள் பக்கத்திலே நியாயத்தை வைப்பதற்காக பரம்பரைக் கதையைக் கூட வளைக்கிறார். பருவப் பொலிவுமிக்க அந்த அழகியை, அழகை ரசிக்க முடியாத ஒரு முனிவனுக்குக் கொடுத்ததைக் கண்டிக்கிறார். அகலிகையின் தோழராக நின்றுகொண்டு, 'நீ, நீ' என்று அகலிகையை விளிக்கிறார். "முனிவனுக்குக் கொடுத்து உன்னைப் பாழ்படுத்தி விட்டார்களே, பாவிகள்!" என்கிறார். "எழில் மிக்க உன் காதலனை நீ அடைய முடியாமல் தடுத்து விட்டார்களே" என்கிறார். அவளுக்காக இவர் வருந்துகிறார். "மனமறிந்து அவள் முனிவனுக்குத் தவறிழைக்கவில்லை" என்று சாட்சியங் கூறுகிறார். முனிவன் வேடத்தில் வந்த இந்திரனை அவள் முனிவனாகவே எண்ணி, முனிவனுக்காகவே இணங்கியதாக விவரிக்கிறார். "ஐயோ பாவம்! அவள் என்ன செய்வாள்?" என்று அனுதாபப்பட வைக்கிறார். "தந்தை காதலை முறித்து, தாடிக்காரன் கையிலே உன்னைச் சிக்க வைத்தான்; இந்திரன் போலிக் கணவனாக வந்து உன்னைக் கெடுத்தான். மனமறியத் தவறு செய்யாத உன்னை மனதைக் கல்லாக்கிக் கொண்ட மாமுனிவன் கல்லாக்கினான்! உனது வாழ்க்கை நாடகத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் பிறர் இழைக்க, நீயே துயருற்றாய்" என்று கண்ணீர் வடிக்கிறார். இராமனின் கால்பட்டு, அகலிகை பெண்ணுருவிற்கு மீண்டதும் முனிவன் அவளை ஏற்றுக் கொள்ள மறுப்பதை ஆத்திரத்தோடு சாடுகிறார். "அவள் போலி முனிவரிடம் ஏமாந்தது குற்றம் என்கிறாயே, ஒரு காலமும் உணராத அவள் போலிக் கணவனிடம் ஏமாந்தது குற்றமென்றால், முக்காலமும் உணர்ந்த நீ கோழிக் குரல் கேட்டு ஏமாந்தது எவ்வளவு பெரிய குற்றம்? சாத்திரம் என்கிறாய், வேதம் என்கிறாய், தருமம் என்கிறாய்! ஆத்திரத்தின் போக்கினிலே சாத்திரத்தை விட்டுவிட்ட தீத்திறத்து இந்திரனால் சிறுமையுற்ற பெண் மயிலைக் கல்லாக்கிய பின்னும் உன் மனக் கல் இளகாமலா இருந்தது? எந்த நேரத்திலும் அவள் மனதறிய எந்தத் தவறையும் செய்ததில்லையே!" என்று பன்னிப் பன்னி வாதாடுகிறார். காவிய தர்மத்தைக் காட்டிலும் காவிய நாயகியின் தர்மத்தையே பெரிதாக்குகிறார். அகலிகையைப் புனிதவதியாக ஆக்கும் காரியத்திற்கு துணைக் கருவிகளாகவே மற்ற கதா பாத்திரங்களைக் கொள்ளுகிறார். அதற்காக முக்காலும் உணர்ந்த முனிவனின் ஞான திருஷ்டியைப் பழிக்கக்கூட அவர் தயங்கவில்லை. காரணம், கவிஞனின் இதயம் அகலிகைக்காகவே தான் பொங்குகிறது. அகலிகை தான் அவரது மூலக் கரு. அவளை யாரும் பழிக்கக் கூடாது. இகழக் கூடாது. அவளது புகழ்வேலியைத் தாண்டி உள்ளே வரக் கூடாது— அந்த அளவுக்கு கவிஞர் அகலிகையோடு ஒன்றி விடுகிறார். ஒன்றியதாலே உணர்ச்சி பாவம், உணர்ச்சி பாவத்தோடு கற்பனை நியாயம். கவிஞர் ஒரு அடி உயர்ந்துவிடுகிறார். போற்றுதலுக்கு ஆளாகிறார்.

நல்ல கவிதைகளை எழுதிய நல்ல கவிஞர்கள் இப்படித்தான் இருந்தார்கள். அதனால்தான் யுகயுகாந்தரங்களாகச் சாகாமல் இருக்கிறார்கள். வள்ளுவன் காலத்திலும் இளங்கோ காலத்திலும் போலிக் கவிஞர்கள் இல்லாமலா இருந்திருப்பார்கள்? அவர்களது கவிதைகள் ஏன் செத்துவிட்டன? அவர்களுக்குக் கற்பனையுமில்லை. உணர்ச்சியுமில்லை. அதனால் மாண்டார்கள். அவை உள்ளவர்கள் வாழ்கிறார்கள்; வாழ்வார்கள்!

(முற்றும்)

ஆசிரியர் கண்ணதாசன் அவர்களின் துணைவியார் 28-4-57 அன்று பெண் மகவுக்குத் தாயானார். மகவுக்கு **அஞ்சுகம்** எனப் பெயரிடப்பட்டது.

முல்லை

திங்கட்கிழமையன்று வெளிவருகிறது

★

பன்மொழிப் புலவர்,
ஆசிரியர் **கண்ணதாசன்**
மற்றும்
பலரது, எழுத்தோவியங்கள் இடம் பெற்றிருக்கின்றன

★

விலை
4 அணா

சிந்தாமணி பி.ஏ.

அகிலத்தின் ஆறில் ஒரு பங்கை கட்டி ஆண்ட ஜார் மன்னன் தான் ஐரோப்பாவிலேயே பணக்காரனாக இருந்தான். அவன் சாகும்போது அவனுக்கு நிலங்களிலிருந்து 50 மில்லியன் டாலர்களும், 80 மில்லியன் டாலர் மதிப்புள்ள வைரம், முத்து மணிகளும், இவையில்லாமல் மாதம் ஒன்றுக்கு ஒரு மில்லியன் டாலர் வருமானமும் வந்து கொண்டிருந்தது. ஜார் நிக்கோலஸ் தான் ரஷ்யாவின் கடைசி மன்னன். ஜார்-கொடுங்கோல் மன்னர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்கினான். மக்கள் பசியால் வாடினாலும், பிணியால் செத்தாலும், எனக்கு வேண்டியது கோலாகல வாழ்வு என்று இறுமாப்போடு கூறியவன். கொடுங்கோலாட்சியை கொடி கட்டிப் பறக்கவிட்டு குவலய மக்களின் கண்களைக் குளமாக்கியவன். பளிங்கு மண்டபம், பழரச பானம், பவளவாய்ப் பாவையர் என்று கொட்டமடித்துக்கொண்டிருந்த நிலப்பிரபுக்களின் கைப்பாவையாக, தலையாட்டிப் பொம்மையாக இருந்தவன். கேட்டுக் குணம் படைத்தவர்களின் பேச்சையெல்லாம் சட்டமாக்கி மக்களை சித்ரவதை செய்தவன்.

ஆனால், அப்படிப்பட்ட ஜார் மன்னன்தான், மக்கள் சக்தி திரண்டெழுந்தபொழுது வரலாற்றுத் தெருவின் ஓரத்திலே வீசியெறியப்பட்டான். புலி போல ரத்தவெறி கொண்டலைந்த அவன், மான் என வேட்டையாடப்பட்டான்.

ஜாரும், அவனது குடும்பமும் கொலை செய்யப்பட்ட வரலாறு சரித்திரத்திலேயே சுவையானதும் சோக மயமானதுமான செய்தியாகும்.

மாடமாளிகையிலே கோலாகலமான வாழ்வு நடத்திய ஜாரும் அவனது குடும்பத்தினரும் சிலந்திக்கூடுகள் நிறைந்த இருட்டறை ஒன்றிலே குரூரமாகக் கொல்லப்பட்டனர்.

மூன்றாண்டு காலமாக மக்கள் சக்திக்கு எதிராக போராடிய மன்னனின் படை வீரர்கள், இனி மேலும் மக்களை நசுக்கி வாழமுடியாது என்று கண்டு கொண்டபின், 1917ல் ஜாரிடம் வந்தனர். வந்தவர்கள் அத்தனை பேரும் படைத் தளபதிகள். இனிமேல் மன்னன் அரியாசனத்தை மறந்துவிட வேண்டியதுதான் முறையும், வழியும் என்று கூறினர். தன்னைச் சுற்றியிருந்தவர்கள், தன்னுடைய ஆணவப் போக்கிற்கு கொடி தூக்கியோர், மக்கள் சக்திகண்டு குலைநடுங்கிப் போனதைக் கண்ட ஜார் மன்னன் மனமுடைந்து போனான். அவனது முகம் பிணம்போல வெளுத்துவிட்டது. குனிந்த தலையுடன் அறையில் அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தான்.

தளபதிகள் போய்விட்டனர். மன்னன் படுக்கையில் போய் படுத்தான். மனம் நிலை குலைந்திருந்ததால் இமைகள் இமைத்துக்கொண்டே இருந்தன. ஒன்றும் தோன்றாத நிலையில் ஷேக்ஸ்பியரின் "ஜூலியஸ் சீசர்" என்ற நாடகத்தைப் படித்துக் கொண்டே இருந்தான்.

மறுநாள் சரியாக 11-15 மணிக்கு, மணிமகுடத்தைத் துறப்பதாகக் கூறி பத்திரத்திலே சாதாரணப் பென்சிலால் கையெழுத்துப் போட்டான். பிறகு பெருமூச்சு விட்டபடியே "இனிமேல் நான் என் விருப்பம் போல் வாழலாம். பாக்கியிருக்கும் என் வாழ்நாளெல்லாம் கிரீமியாவில் பூஞ்செடிகளை வளர்ப்பதில் கழிக்கமுடியும்" என்று கூறினான்.

ஜாரும் அவனது குடும்பத்தினரும் தங்கள் கடைசி நாட்களை ஊரல் மலைச்சாரலில் உள்ள ஒரு நகரத்தின் ஒதுக்குப்புறத்திலே உள்ள இரண்டு அறைகள் கொண்ட சிறியதோர் வீட்டிலே, கழித்தனர். புரட்சிக்காரர்களால், அந்த வீட்டிலே சிறைவைக்கப்பட்ட ஜாரும் அவனது குடும்பத்தினரும், சாதாரண குடியானவர்களைப்போல உண்ணும்படி செய்யப்பட்டனர். அவர்களின் உணவுக்கு உப்பு கூட கொடுக்கப்படவில்லை. வரண்டு போன ரொட்டியை மட்டுமே உண்டு வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது அவர்களுக்கு.

அந்த வீட்டின் ஜன்னல்களுக்கெல்லாம் கருப்புச் சாயம் பூசப்பட்டது. ஜன்னலைத் திறக்கவே கூடாது என்று கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது. ஜாரின் மகள் ஒரு முறை காற்று வேண்டும் என்று ஜன்னலைத் திறந்த குற்றத்திற்காக, வீட்டைக் காத்து நின்ற வீரன் ஒருவன் அவளை நோக்கிச் சுட்டான். ஒரு நாளைக்கு ஐந்தே நிமிஷங்கள் மட்டும் தோட்டத்தில் உலவுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

வீட்டைக் காவல் காத்த வீரர்கள், ஜாரையும், அவனது மக்களையும் எவ்வளவு கேவலமாகவும், இழிவாகவும், பேசவும், நடத்தவும் முடியுமோ அவ்வளவும் செய்தனர். அரசியிடம் இருந்த புத்தகத்தையும், பணத்தையும் பறித்துக்கொண்ட வீரன் ஒருவன் "இவையெல்லாம் உனக்கு இனி தேவைப்படாது" என்று கூறி எக்காளமாகச் சிரித்தான்.

ஜார், இவை எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு அமைதியாகத்தான் இருந்தான். ஆனாலும் அவனது மனைவி அதிகார பீடத்திலேஇருந்தவளாதலால், "எல்லோரையும் என்றாவது ஒரு நாள் பழி வாங்குவேன்" என்று கூறிக்கொண்டிருப்பாள்.

ஜூலை, 16, 1918 - நள்ளிரவு. காவற்படையின் தலைவன் நகரத்திலே 'புரட்சி' நடக்கிறதென்று கூறி பத்திரமான இடத்திற்கு அழைத்துப்போனான். அந்த இடமோ இருள் சூழ்ந்த ஓர் சிறிய அறை. சிலந்திக் கூடுகள் அறை முழுதும் நிரம்பிக்கிடந்தன. அங்கே போனதும் இனம் தெரியாத பயத்தால் உடல் நடுங்கியது. அரசி நிற்கமுடியாமல் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டாள். அவளது மடியிலே, நோயுற்றிருந்த மகன் உட்கார்ந்திருந்தான்.

அப்போது திடீரென்று துப்பாக்கி ஏந்திய வீரர்கள் சிலர் உள்ளே நுழைந்தனர். "ஆகா! உங்களையெல்லாம் காப்பாற்ற உங்கள் நண்பர்கள் முயன்றனர். ஆனால் நாங்கள் இப்போது கொலை செய்யப்போகிறோம் உங்களை; அவர்கள் வெற்றிபெற முடியாது", என்று கூறி எக்காளமாகச் சிரித்தனர்,

திடீரென ஒருவன் ஜாரின் இதயத்தை நோக்கிச் சுட்டான். துப்பாக்கியின் ரவை, இருதயத்திலிருந்து குருதியைக் கொட்ட வைத்தது. மன்னன் புழுதி படிந்த தரையிலே புரண்டான். முடிமன்னன் சாய்ந்தது கண்ட வீரர்கள், அரசியையும் அவனது மக்களையும் விரட்டி விரட்டிச் சுட்டனர். போர்முறை அறியாத அவர்கள் தலையணையால் தங்களைக் காத்துக்கொள்ள நினைத்தனர்.

வீரர்கள் அவர்களை சுட்டதோடு திருப்தி அடையவில்லை. துப்பாக்கியின் முனையிலே உள்ள கத்தியால் அவர்களின் உடலையெல்லாம் கிழித்து துண்டு துண்டாக்கினர். கோர அமைதி நிலவிய அந்த இருட்டறையிலே மன்னனின் நாய் மட்டும் பிலாக்கணக் குரலில் ஓலமிட்டுக் கொண்டிருந்தது. அழுகுரலைக் கேட்ட வீரர்கள் நாயின் உடலிலே கத்தியைப் பாய்ச்சிவிட்டனர்.

துண்டாடப்பட்ட உடல்களையெல்லாம் "காஸோலினில்" நனைத்து தீயிட்டுப் பொசுக்கினர். கருகிப்போன சதைத் துண்டங்களையும், பிணச் சாம்பலையும், குப்பைக்குழி ஒன்றிலே வீசி எறிந்தனர்.

சில நாட்களுக்குப்பின், குப்பைக் குழியைக் கிளறியபோது தங்க நகைகளும், வைரங்களும் கிடைத்தன.

ஜாரின் பயங்கரப் படுகொலை, மாற்றம் விரும்பிய புரட்சிக்காரர்களால் செய்யப்பட்டதல்ல. புதிதாக அமைக்கப்பட்ட ஆட்சி, ஜாரின் படுகொலைக்குக் காரணமாய் இருந்தவர்களை கைது செய்து, விசாரித்து சிறை வைத்தது. அரச குடும்பத்தின் படுகொலைக்கு ரத்தவெறி பிடித்த ஆத்திரக்காரர்களே காரணம்.

ஜார் குடும்பத்துப் பிணச் சாம்பல் இப்போது பாரிஸ் நகரத்திலே புதைக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்கத் தூதுவர் ஒருவரின் முயற்சியால் அச் சாம்பல் பாரிசுக்குக் கொண்டு வரப்பட்டது.

ஜார் மன்னனுக்கு ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் படிப்பதிலே விருப்பம் அதிகம். ஆமாம்! ஷேக்ஸ்பியரின், "உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் இடறிவிழுவதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் ஏற்படும். அவர்கள் கீழே விழுந்துவிட்டால் சுக்கல் சுக்கலாக ஆகிவிடுவார்கள்." என்ற வரிகள் அவனுக்கு நன்றாக ஞாபகம் இருந்திருக்கும்.

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 || 18-5-57 || இதழ் 35

மேயர் கூற்று!

தமிழகத்து அரசியலில் தி. மு. கழகம் தலையெடுத்த பின்பு, அண்ணா அவர்களின் தனித்தன்மையை மாற்றாரும் உணர ஆரம்பித்த பிறகு, அண்ணா அவர்களோடு கலந்துகொள்ளும் மாற்றுக் கட்சித்தலைவர்கள், ஒரு வார்த்தையாவது அண்ணாவைப் பற்றிப் பேசாமலிருப்பதில்லை. அரசியல் அரங்கம் அந்த முறையை தற்போது ஒரு சம்பிரதாயமாகக் கொண்டுவிட்டது.

சென்ற கிழமை சென்னை கைத்தறி விழாவில் கலந்துகொண்ட சென்னை மேயர் சீனிவாசன் அந்த முறையைக் கையாண்டார்.

"தோழர் அண்ணாதுரையை நான் நன்கறிவேன். மாணவனாக இருந்த காலத்தில் அவரைப் பல மன்றங்களுக்கு அழைத்துச் சென்று சொற்பொழிவாற்றச் செய்திருக்கிறேன்; எங்களிருவரிடையேஅரசியல் வேறுபாடிருந்தாலும் இப்படிப்பட்ட பொது விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கிறது நண்பர் அண்ணாதுரையவர்கள் அரசியல் கருத்துக்களைக் கலக்காமல் கைத்தறியாளர்கள் பற்றிப் பேசுவார்கள் என எதிர்பார்க்கிறேன். இப்போது அறிஞர் அண்ணாதுரையவர்களைப் பேச அழைக்கிறேன்" என்று தலைமை வகித்த மேயர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஒரு கட்சியின் கொள்கை பிடிக்காமல், அந்தக் கட்சிக்கு எதிராக இருக்கிற வேறொரு கட்சியில் இணைந்துவிடுவதாலேயே ஒரு சிலர் அரசியல் வாதிகளாகிவிடுகிறார்கள். தங்களின் தொழில் 'அரசியல்' என்று வெளிப்படையாகச் சொல்லிக்கொள்கிறார்கள். அரசியல் என்றால் என்ன, அந்த அரசியலுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு என்ன,-என்பதை அறிந்துகொள்ளத் தவறியவர்களின் சித்தாந்தம் அது! சமுதாய அஸ்திவாரத்தின் மேல் கட்டப்படுகிற மாடி வீடுதான் அரசியல் என்பதை ஏனோ அவர்கள் புரிந்துகொள்ளத் தவறிவிடுகிறார்கள்! புரிந்துகொண்டவர்கள், தங்களின் அரசியல் கருத்து பலவீனமாக இருப்பதால் 'அரசியல் கூடாது! அரசியல் கூடாது! - என்று தெருப்பில் நடனமாடுகிறார்கள்.

வணிகத்துறையில் ஈடுபட்டவர்கள் அரசியலை ஒதுக்கலாம்! நியாயமுண்டு.

ஆண்டிகள், அனைத்தையும் துறந்த பண்டாரங்கள் அரசியலை வெறுக்கலாம்! பொருளிருக்கிறது

அரசியல் வாதிகளே 'அரசியல் பேசாதீர்கள்! அரசியல் பேசாதீர்கள்!! என்று துடித்தால், நடுங்கினால், அந்த அரசியல் வாதிகள் முதுகெலும்பற்ற ஒரு கொள்கையை நம்பிக்கொண்டிருக்கிறார்கள் என்று தானே பொருள்!

அண்ணாவும், மேயரும் கலந்துகொண்ட கூட்டமோ கைத்தறி விழாக் கூட்டம்! ஏழைச் சமுதாயமும், அந்தச் சமுதாயத்தைக் கட்டியாண்டுவரும் சர்க்காரும் சம்மந்தப்பட்ட விழா. திருமண வீட்டில் மாங்கல்யத்தைப் பற்றிப் பேசக்கூடாது என்பதுபோல், கடல்கரையில் அமர்ந்துகொண்டு தென்றலை நினைக்கலாமா என்று கூறுவதுபோல், கைத்தறி விழாவில் அரசியல் பேசலாமா என்கிறார் மேயர்! அவரும் ஒரு அரசியல் வாதி. ஆளும் கட்சியைச் சார்ந்தவர். மேயர் ஏன் அவ்வாறு சொன்னார் என்பதின் உட்பொருளை கூட்ட முடிவில் அனைவரும் அறிந்துகொண்டார்கள்.

அரசியல் பற்றிப் பேசக் கூடாது என்று, கூட்டத்தின் தலைவர் என்ற முறையிலே வேண்டுகோள் விட்டவர், தன்னுடைய உரையிலே அரசியல் கலக்காமல் பேசினாரா என்றால், இல்லை. வார்த்தைக்கு வார்த்தை காங்கிரஸ் கட்சியின் 'புனிதம்' குறித்து 'ஆலாபனம்' செய்தார்.

காங்கிரஸ் கட்சி நெசவாளர்களுக்குச் செய்த சேவையை மறக்கமுடியாதென்றார். கைத்தறியாளர்களுக்கு சர்க்கார் செய்த துரோகத்தை அறிஞர் அண்ணா எடுத்துச் சொல்லிவிடக்கூடாது என்பதற்காகத் தான் மேயர் அரசியல் கூடாது என்று சொன்னார் போலும். அந்தோ பரிதாபம்! ஆனால் அண்ணா அவர்கள் மேயரின் தலைமையுரையை வார்த்தைக்கு வார்த்தை உடைத்தெறிந்தார்கள்.

"தலைவர்கள் அவர்கள் அரசியல் கருத்துக்களைப் பேச வேண்டாம் என்று கூறினார். வேண்டுமானால் நாம் கட்சிக் கருத்துக்களைப் பேசாமலிருக்கலாம். ஆனால் அரசியல் கருத்துக்களை எப்படிப் பேசாமலிருக்க முடியும்! நாம் எல்லாம் அரசியல் வாதிகள். நாமே அரசியலை வெறுத்தால் பின் உலகம் அரசியல் வாதிகளையே வெறுக்கத் தொடங்கிவிடுமே!" என்று அண்ணா அவர்கள் இடித்துரைத்தார்கள்.

சர்க்காரின் அலட்சியப் போக்கினால் கைத்தறியாளர் படும் துயரை, பேசும்போது, பதிமூன்று இடங்களில் எடுத்துக்காட்டினார்கள். 'மேயர் அவர்களே! மேயர் அவர்களே! இந்த இடத்தில் அரசியல் குறுக்கிடுகிறது!' என்று சுட்டிக்காட்டினார்கள்.

'சர்க்கார் கதரை ஆதரிக்கிறது; ஆலைத்துணியை ஆதரிக்கிறது. கைத்தறியையும் ஆதரிப்பதாகச் சொல்கிறது. இங்கே அரசியல் குறுக்கிடுகிறது.'

'செஸ்நிதி தூக்குக்கயிறு என்று ஆச்சாரியார் சொன்னார். அவர் யோசனை டில்லியில் ஊறுகாய்ப் பானையிலிருக்கிறது. இங்கே அரசியல் குறுக்கிடுகிறது.'

இந்தக் கைத்தறி விழா தை மாதத்தில் பொங்கல் நன்னாளையொட்டி ஏற்பாடு செய்யப்படுமானால் இன்னும் அதிகமான பலன் கிடைக்கும். ஆனால் இந்த விழா நாளைக் குறிக்கும் அதிகாரம் கூட எங்கோ, யாரோ குறிக்கிறார்கள். இங்கே அரசியல் கலக்கிறது'

—என்று அறிஞர் அண்ணா அவர்கள் மேயருக்கு அடிக்கடி சுட்டிக்காட்டினார்கள்.

எதிர்க்கட்சியின் கொள்கைகளும், தொண்டும் சக்தி வாய்ந்ததாக இருக்கும்போது பலவீனமான கட்சியைச் சார்ந்தவர்கள் அரசியல் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டால்தான் அவர்களது பலவீனம் மூடிமறைக்கப்படும் என்பதை காங்கிரஸ் கட்சியின் உச்சிக்கிளையில் இருப்போர்கூடப் புரிந்துகொள்ளாதது வருந்தத் தக்கதாகும். அதைக்கூட அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

"கைத்தறியாளர்கள் இன்று ஓரளவுக்கு முன்னேறி இருக்கக் காரணம் சர்க்கார்தான் என்று தலைவர் கூறினார். அதற்கு எங்களைப் போன்றவர்களும், ஒரு அனாதைக் கட்சியினராகிய நாங்களும் கொஞ்சம் காரணமாக இருந்திருக்கிறோம். இதனை மேயர் போன்றவர்கள் எடுத்துரைக்கமாட்டார்களா? நம்மைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறமாட்டார்களா? என்று நாங்கள் ஏங்கிக் கிடக்கிறோம். அந்த அரசியல் பெருந்தன்மை, மேயர் போன்றவர்களிடம் இருந்திருந்தால் நாங்கள் மகிழ்ந்திருப்போம்; நாங்கள் சிறு கட்சியினர். இந்தச் சிறு கட்சியின் நடவடிக்கைகள் ஒருவேளை பெரிய கட்சியைச் சார்ந்த மேயர் அவர்களுக்குத் தெரியாமலிருந்திருக்கலாம்" என்று அண்ணா அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

அரசியல் வேறு, மக்கள் வேறு என்று நினைத்திருப்பது தவறு என்பதை மேயரின் 'மேலான' கவனத்திற்கு நமது தலைவர் கொண்டுவந்ததின்மூலம் காங்கிரஸ் தலைவர்கள் இனிமேல் தொண்டு மக்கள் பிரச்சினையில் தலையிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவர்களும் அவ்வாறு எண்ணிக்கொண்டிருந்த 'அரசியல் தொழிலதிபர்கள்' தானே! ★

காமராசர் எதிரே!

'ஆமா'

நடந்து முடிந்த முதல் சட்டசபைக் கூட்டத்தில் தி. மு. க. உறுப்பினர்களில் பெரும்பாலோர் பேசினார்கள். காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் பேசினார்கள். ஆனால் பிரதமர் காமராஜர்?

'ஆமா' என்ற ஒரே ஒரு வார்த்தை தான் அவர் பேசியது. அதுவும் அண்ணா பேசியபோது குறுக்கிட்டுப் பேசியதுதான் அந்த வார்த்தை.

★

பிராயச்சித்தம்

மனச்சான்றுக்கு விரோதமான பல காரியங்களைச் செய்தவர்கள் பிராயச்சித்தம் தேடிக்கொள்ளக் குழைவாகப் பேசி நடிப்பதுண்டு.

காமராஜர் கடவுளின் பெயரால் பதவிப் பிரமாணம் எடுத்ததும், தேனீ தியாகராசன் காந்தியின் பெயரால் பதவிப்பிரமாணம் எடுத்ததும் அந்த வகையான 'அரசியல் பிராயச்சித்தங்கள்' தான்!

★

நடந்தது இது!

சர்க்கார் கட்சித் தலைவர் சுப்ரமணியம் பேசுகையில் 'தி. மு. க. வின் கொள்கைகளை மாற்றிக் கொள்ளும்படி சொல்ல எனக்கு உரிமையில்லை' என்று குறிப்பிட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருந்தது. நடந்தது அப்படியல்லவாம்!

'தி. மு. க. அதனுடைய கொள்கைகளை மாற்றிக் கொள்ளவேண்டும்' என்று சுப்ரமணியம் பேசியபோது, அண்ணா அவர்கள் எழுந்து 'அமைச்சருக்கு அந்த உரிமை இல்லை' என்று குறுக்கிட்டுச் சொன்னபிறகுதான், தனக்கு உரிமையில்லை என சுப்ரமணியம் பேசினாராம்!

★

அண்டா

அடுக்குமொழியில் பேசவேண்டுமென்று ஆசைப்பட்ட தேனீ தியாகராசன், அண்டா திட்டம் குண்டாத் திட்டம், கோச்சுபாக்டரி மேச்சுபாக்டரி என்று பேசினாரல்லவா. தொலைவிலிருந்த காமராசருக்கு 'அண்டா' என்ற வார்த்தை புரியவில்லையாம். எதிரே இருந்த அண்ணாவைக் கேட்டாராம் அப்போதும் காமராசருக்குப் புரியவில்லையாம். அண்ணாவுக்கு அருகிலிருந்த கருணாநிதி தன் கைகளால் 'ஊமை ஜாடை' காட்டினாராம் காமராசருக்கு!

★

வாழ்க திராவிடம்

தோழர் ஆசைத்தம்பி அவர்கள் சட்டசபையில், காங்கிரசாரின் மத்தியில் அமர்ந்து கொண்டே காங்கிரசின் ஊழல்களைப் பலமாகக் கண்டித்தார். காங்கிரஸ் உறுப்பினர்கள் பலர் குறுக்கிட்டனர். ஆனாலும் ஆசைத்தம்பி அவர்கள் தன்னுடைய கருத்தை வலியுறுத்திக் கூறிவிட்டுத்தான் அமர்ந்தார். யாரும் எதிர்பாராத வகையில் அவர் தனது முடிவுரையில் '**வாழ்க திராவிடம்**' என்று உரக்கக் கூறிவிட்டு அமர்ந்தார்.

ருமேனிய நாட்டில் 'ருசிகரமான' தேர்தல்

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மண்ணெண்ணெய்க் கிணறுகள் மண்டிககிடக்கும் நாடாகிய ருமேனிய நாட்டின் தேர்தல் கீதங்கள் இரண்டே சொற்களில் அடங்கியுள்ளன.- ஒன்று 'சகோதரர்கள்' மற்றொன்று 'திருடர்கள்.'

இந்த இரண்டு சொற்களைத் தான், ருமேனியப் பாராளுமன்றத்திற்கு அபேட்சகராக நிற்பவர்களும் அவர்களை ஆதரித்து ஓட்டுகள் திரட்ட வருபவர்களும் கற்கவேண்டிய திருவாசகங்களாகும். இச்சொற்கள் தான் அங்கு தேர்தல் மேடைகளில் அடிக்கடி முழக்கப்படுகின்றன. ருமேனிய நாட்டுத் தேர்தல் 'சகோதரர்கள்' என்ற சொல்லில் தொடங்கி 'திருடர்கள்' என்ற தொடரில் சென்று முடியும். 'சகோதரர்கள்' என்பவர்கள் அபேட்சகரின் எதிரில் நிற்கும் மக்கள். 'திருடர்கள்' என்று சொல்லப்படுபவர்கள் துரதிர்ஷ்டத்தை நாட்டிற்குக் கொண்டுவந்ததாகக் கருதப்படும் எதிர்க்கட்சித் தோழர்கள். 'எதிர்க்கட்சித்தோழர்கள்' என்ற தொடர் ஆளுங்கட்சியினரைப் பொருத்தவரை ஏனைய பிற கட்சித் தோழர்களைக் குறிக்கும். ஆளுங்கட்சி யொழிந்த பிற கட்சித் தோழர்கள், ஆளவந்தார்களை 'எதிர்க்கட்சித் தோழர்கள்' என்ற சொல்லால் குறிப்பது மரபு. "சகோதரர்கள் - திருடர்கள்" என்ற இவ்விரு சொற்களிலேயே ருமேனியப் பேச்சாளர்களின் சொல்வன்மையும், அவர்களின் தேர்தல் பிரச்சாரத்தின் பெரும்பகுதியும் செலவழிக்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இவ்விரு ருமேனிய அரும்பதங்களும், திடீரென்று ஒருநாளில் ருமேனிய நாட்டுமக்களால் கண்டுபிடிக்கப் பட்டவை அல்ல. அப்பதங்கள், பொருள் பொதிந்தவை என்பதோடன்றி, சிந்தனைப் பசிக்குச் சிறந்த உணவாக மிளிர்வதுங் கண்கூடு. பிறநாடுகளில் தேர்தல் காலத்தில் முழக்கிடும் வார்த்தைகள் பலதிறத்தனவெனும், 'திருடர்கள்' என்ற சொல் அந்நாடுகளில் பயன்படுத்தப்படுகிறதா என்பது ஐயமுடைத்தாகும்.

ருமேனிய மொழி, சொல்லாழமும், கருத்தாழமும், கேட்பதற்கு இனிமையுங் கொண்ட பல அருஞ்சொற்களைத் தன்னகத்தே கொண்டதாகும். எனினும் அரசியல் வாதிகள் தங்களுக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருசொல் தான் 'திருடர்கள்' 'எதிரிகள்' 'முட்டாள்கள்', 'திறமையற்றவர்கள்' 'அகோரமானவர்கள்', 'குடிகாரர்கள்' என்று வேற்று நாடுகளில் பலவாறுகத் தாக்கிப் பேசுவார்கள். ஆனால், ருமேனிய நாட்டில் வாழும் ருமேனிய மக்கள் 'திருடர்கள்' என்ற சொல், மேற்கூறிய சொற்களெல்லாம் உள்ளிட்ட ஒரு சொல்லெனக் கருதுகிறார்கள்.

'திருடர்கள்' என்ற சொல் தான் ருமேனிய நாட்டுத் தேர்தல் பிரசாரங்களில் முதன்மையான மிகச் சிறந்த உண்மையைப் புலப்படுத்தும் கருவியாக அமைந்துள்ளது. 'திருடர்கள் சிறைச்சாலைக்குச் செல்லட்டும்" என்று உரக்கக் கூச்சலிடுவார்கள். பேச்சாளரும் தலையசைத்து "ஆம்! திருடர்கள் சிறைச்சாலைக்குச் செல்லத்தான் வேண்டும்" என்று முழக்கமிடுவார். சொற்பொழிவாளரும் மக்களும் ஏகமனதாகத் "திருடர்கள் சிறைச்சாலைக்குச் செல்லட்டும்" என்ற கீதத்தை முழக்கி, அதனைச் செயல் முறையில் கொண்டு வந்துவிட்டதாக எண்ணி மகிழ்ச்சிகொள்வார்கள்.

இவ்வாறு அவர்கள் நயம்பட நடாத்திய தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலெல்லாம் 'திருடர்கள் சிறைச்சாலைச்குச் செல்லட்டும்' என்ற தங்களின் போர் முரசைப் பட்டிதொட்டிகளெங்கும் முழக்கத் தவறுவதில்லை. ஆனல் இவர்கள் குறிப்பிடும் அந்தத் 'திருடர்கள்' இதுவரை, சிறைச்சாலைகுச் சென்றதே இல்லை.

'சகோதரர்கள்' என்ற மற்றொரு சொல்லும் தேர்தல் மேடைகளில் அடிக்கடி முழக்கப் படுகிறது. ஆனல் இச்சொல்லைப் பற்றி ஆராய ஆரம்பித்தால் விந்தையாக இருக்கும். முதன் முதலாக இந்த வார்த்தையைத் தேர்ந்தெடுத்த அந்த செந்நாப் புலவனின் அறிவுதான் என்னே! அவன் பயன்படுத்துவதற்கு, ருமேனிய மொழியில் எண்ணற்ற நட்பு வார்த்தைகள் இருந்தன. ஆனல், அவைகளில் இருந்து கடைந்தெடுத்த சொல் "சகோதரர்கள்" என்பதுதான். சில நேரங்களில் இச்சொல் "விவசாயச் சகோதரர்களே" "தொழிலாளச் சகோதரர்களே" என விரியினும், அத்தொடர்களும், 'சகோதரர்கள்' என்ற சொல்லை உள்ளிட்ட ஒன்றே என்பது வெள்ளிடைமலை.

"சகோதரர்களே! உங்களுக்காக என் உடல், பொருள், உயிர் அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறேன். இரத்தத்தாலும், சதையிலும் நீங்கள் என் உடன் பிறந்தோர்கள். உங்களுடைய அந்தக் காயங்கள், உங்களைத் துன்புறுத்துவதைவிட என்னை எவ்வளவு துன்புறுத்துகிறது தெரியுமா?" இவ்வாறுதான் ஒரு ருமேனிய அபேட்சகன் தன் தொகுதி மக்களிடம் - சகோதரர்களிடம் பேசுவது வழக்கம்.

பிறநாடுகளில், மேடைகளில் பேசுவோர் மக்களைப் பார்த்து 'சீமான்களே', 'குடிமக்களே' 'தோழர்களே' என்றுதான் அழைப்பது வழக்கம். ஆனல் ருமேனிய அபேட்சகனுக்கு இவையெல்லாம் உதவாக்கரைச் சொற்கள். அவன் தனக்கென ஒரு புதிய வாய்பாட்டை அமைத்துக்கொண்டான். அதுதான் "சகோதரர்கள்" என்பது. ஒரு முறை ருமேனிய அபேட்சகன் ஒருவன், தான் சொற்பொழிவாற்ற இருந்த மக்கள் திரளின் ஆர்வத்தைக் கண்டு, உணர்ச்சிவயப்பட்டு, பெருமிதத்துடன், தன் உள்ளத்தில் இருந்து எழுந்த ஒரு அருஞ்சொல்லை, முத்தென உதிர்த்தான். அதுதான் 'சகோதரர்கள்' என்பது. இதுமுதல், தேர்தல் காலங்களில் "சகோதரர்கள்" என்ற அச்சொல்லையே, தேர்தல் பிரசாரகர்களும் அபேட்சகர்களும் தொடர்ந்து உபயோகிக்க ஆரம்பித்தார்கள்.

கடவுளாலும் மக்களாலும் புறக்கணிக்கப்பட்ட, தாழ்ந்த நிலையிலுள்ள கிராமங்களும் தேர்தல் காலங்களில் மோட்டாரினல் பார்வையிடப்படும். அம்மோட்டாரில் இருந்து ஒரு பருத்த மனிதர், கம்பளிக்கோட்டுடன் வெளிவருவார். கிராம மக்கள் முன்னறிவிப்பின்மூலம், மேயர் அலுவலகத்தின் அருகே குழுமியிருப்பார்கள். இவ்வாறு தேர்தல் காலங்கள் தவிர, பிற காலங்களில் மக்கள் கூடுவது இராணுவத்திற்கு ஆள் திரட்டும் போதுதான். பெண்கள், குழந்தைகள் முதியவர்கள் எல்லோரும் தொப்பிகளில்லாமல் களிமண் தரைமீது நகரத்தில் இருந்துவந்த அந்தப் 'புதுமனிதர்' முனபு நிற்பார்கள். சிறிது நேரத்தில் நகரத்துச் சீமான், அக்கிராம மக்களுக்கு முன்பாகத் தோல் செருப்பணிந்து "சகோதரர்களே" என்று தொடங்கி, தன் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

தேர்தல் காலத்தில் ருமேனிய நாட்டின் அன்றுட நிகழ்ச்சிகள் மனமுருக்கும் மாண்புமிகு காட்சிகள் எனில் அமையும்.

இரண்டாவது சொல்லாகிய "திருடர்கள்" என்ற சொல், நாட்டையாளும் பொறுப்பேற்ற மந்திரிமார்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. ருமேனிய நாட்டு அரசியல் அரிச்சுவடியில் 'புகாரெஸ்ட்' நகரத்தில் கொலுவீற்றிருக்கும் மந்திரிகள் "திருடர்கள்."

இவ்வாறு ருமேனியர்களின் வாழ்க்கை, தேர்தல்கள் மூலமாக, சகோதரர்களில் இருந்துதிருடர்களுக்கும், திருடர்களில் இருந்து சகோதரர்களுக்குமாகச் சக்கரம் போல் சுழன்று சுழன்று வருகிறது.

ருமேனியப் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட உடனேயே தேர்தல்கள் பிரகடனப்படுத்தப்பட்டு ருமேனிய நாடு, 'அபேட்சகர்கள், தொகுதி மக்கள் எனும் இரு கூறுகளாகப் பிரிகிறது. பல வாரங்களுக்கு, தேர்தலின் காரணமாக ருமேனியாவில் ஒரு புதிய சூழ்நிலை உருவாகிப் பொலிவுற்று விளங்குகிறது. மேற்கூறிய இரு அணிவரிசைகளும், ஒன்றுக்கு முன் ஒன்று முட்டிக்கொள்வதால், இந்தப் புதிய சூழ்நிலை ஒரு நல்ல சூழ்நிலையாக மாறுகிறது.

"தாங்கள் நாட்டின் பிரதிநிதிகளாகப் போகிறோம்" என்ற எண்ணத்தால் உந்தப்பட்ட ருமேனிய அபேட்சகர்கள், தேர்தல் காலத்தில் தங்கள் தங்கள் தொகுதிகளுக்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டிருப்பார்கள். இவ்வாறு ருமேனியா முழு[illegible] பல வாரங்களுக்கு[illegible] தேர்தலிலேயே திளைத்திரு[illegible]ம்.

சூதாட்டங்களைப்போல், ஆளுங்கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்கள், எதிர்க்கட்சி அபேட்சகர்களைப் போலவே, இருமுறை அல்லது மும்முறை வெற்றி பெறுவதற்கு இடமுண்டு. ஆளுங்கட்சியைச் சேர்ந்த, அதி முக்கியத்துவம் பெருத, ஒரு அபேட்சகர், எதிர்க்கட்சியில், புகழ் ஏணியின் உச்சியை எட்டிப்பிடித்த அபேட்சகரை

வெண்பா ஆயிரம்

நமது அச்சகத்திலிருந்து வெளியிடுவதாக இருந்த 'வெண்பா ஆயிரம்' என்ற நூலை சென்னை மலர் நிலையத்தார் வெளியிட அனுமதி பெற்று அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்நூல் வேண்டி இதுவரை தென்றல் முகவரிக்குப் பணம் அனுப்பியவர்களுக்குமட்டும் மலர் நிலையத்திலிருந்தே புத்தகம் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இனிமேற்கொண்டு புத்தகம் வேண்டுவோர், மலர் நிலையம், 133. பிராட்வே, சென்னை-1, என்ற முகவரிக்கு எழுதித் தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

நிர்வாகி,
தென்றல்

ஆசிரியத் தோழருக்கு..

பார்ப்பன இளைஞரின் கடிதம்!

மதுரா,
13—5—57.

அன்புள்ள ஆசிரியருக்கு,

வடநாட்டையும் அதன் வளத்தையும், வடவரையும் எழுதப் புகுந்தால் தென்னவர் ஒவ்வொருவரின் நெஞ்சமும் தணலாய் கனற்றும். பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாய் தனதைப் படைத்துக்கொண்டு, விற்பனை செய்யும் நிலையமாய் தென்னகத்தை அவர்கள் சமைக்க நினைக்கும் முயற்சியை நோக்குங்கால் நெஞ்சம் எரி தணலாகும். நான் ஒரு பார்ப்பனன். முன்னமெல்லாம் திராவிட கழகங்கள், அதிலும் முற்போக்கு எண்ணம் படைத்து செயலாற்றும் தி. மு. க. எனில் விரும்பாதவன். வெறுப்பவன்! காலச் சூழ்நிலையில், அறியாமை இருள் அகன்ற விடத்து தி. மு. க.வின் கருத்துக்கள் நல்லவை! நன்மை பயப்பவை...நாட்டின் இன்றைய நிலையை அனுசரித்து எழுந்தவை என்று எண்ணத் துவங்கிவிட்டேன்! பொதுப் படையாகக் கூறுமிடத்து திருந்திவிட்டேன் எனலாம்!

நிற்க!

முன்னாள் பீகார் மாநிலத்தில் மான்பூம் என்ற மாவட்டம், அதுவே இந்நாள் பீகார் மாநிலத்தின் தன்பாத் மாவட்டமாகவும் வங்காள மாநிலத்தின் பூர்ளயா மாவட்டமாக மாநில சீர்திருத்தத்தினால் பிரிக்கப்பட்டுவிட்டது. மேற்கூறிய தன்பாத், பூர்ளயா மாவட்டங்கள் ம[illegible]ன் இரும்பு நிலக்கரி தொழில் துறையில் இந்தியாவிலேயே வளம் பொருந்தியதாக இருக்கின்றன. தன்பாத் [illegible]ட்டத்தில் ஜெரியா என்ற நிலக்கரிச் சுரங்க நகரும் பூர்ளயா மாவட்டத்தில் அசன்சாலும் இருக்கின்றன. இந்த இரண்டினை உள்ளடக்கித் தான் டாடாநகர்! ரூர்கலா! பிலாய் போன்ற இரும்புத்தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. பிரயாணிகள் போக்குவரத்திற்காக இந்த இரு மாவட்டங்களிலும் ரயில்பாதைகள் போடப்படவில்லை. நிலக்கரியை எடுத்துச்செல்ல வேண்டிய போக்குவரத்திற்காக போடப்பட்டிருக்கின்றன. நிலக்கரிச் சுரங்கங்கள் நிறைய உள்ள பிரதேசங்களில் ரயில்வே சந்திப்பை உண்டுபண்ணியிருக்கின்றனர். மின்சார வசதி, மண்சுமந்து செல்வதற்கு மின்சாரத்தினாலேயே இயங்கும் கேபிள் சாதனங்கள்—இவை இரண்டையும் ஒவ்வொரு சுரங்கமும் பெற்றிருக்கிறது.

ஏன் இதுபோன்று நெய்வேலியை—அதாவது தென் ஆற்காடு மாவட்டத்தை தொழில் மயமாக ஆக்கக்கூடாது? சேலத்தில் இரும்பும் அலுமினியமும் புதைத்துக் கிடக்கிறது. கொல்லிமலைச் சரிவுகளில் நிலக்கரியும் இரும்பும், மாங்கனியும் கிடைப்பதாகத் தெரியவருகிறது. இவற்றையெல்லாம் நெய்வேலியில் கிடைக்கபெறும் நிலக்கரி கொண்டு பெரிய போக்குவரத்து சாலையை அமைத்துக்கொண்டு ஏன் செயலாற்றக்கூடாது? நிலக்கரியைத் தோண்டி ஏன் தென்னகத்தை சீக்கிரம் தொழில் மயமாக ஆக்கக் கூடாது? சீக்கிரம் நிறைவேற்றுவதில் தயக்கம் ஏன்? நெய்வேலியின் உதவியால் — ரயில் போக்குவரத்தின் நன்மையால் சேலம் ஏன் டாடாவாக மாறக்கூடாது? பெரம்பூரும், பொன்மலையும் ஏன் சித்தரஞ்சனாக மாறிவிடக்கூடாது? ஆம்! மாறக் கூடாது. இது வடவரின் நீங்காத எண்ணம்! சேலம் டாடாவானால் துணி உற்பத்தி போட்டியில் பம்பாய் கோவையாகிடும் என்ற எண்ணம்! நம்மை வளரவிடாமல் நசுக்கினால்தான் அவர்களுக்கு நிரந்தரமான (மார்க்கெட்) விற்பனை நிலையம் கிடைக்கும்.

மணியம்,
பீகார்.

★ 5ம் பக்கத் தொடர்ச்சி ★

விட மிக எளிதில் வெற்றி பெறுவார் என்பது உறுதி.

நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்ற சாதகமான சூழ்நிலை ஆளுங்கட்சி அபேட்சகர்களுக்கிருப்பினும், தேர்தல், அவர்களுக்குத் தலைவலி கொடாமல் இருப்பதில்லை. வாக்குகளைச் சேகரிப்பதற்காக, இந்தப் பரிதாபத்துக்குரிய அபேட்சகர்கள், நாட்டின் ஒரு மூலையில் இருந்து மறு மூலைக்குச் செல்கிறார்கள். ஒரே சரக்கை விற்பதற்குச் செல்லும், இரு வெவ்வேறு வியாபாரிகளைப்போல், ஆளுங்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும், சில சந்து முனைகளில் கூடுவார்கள். இவ்வாறு நம்பத்தகுந்த கம்பெனிகளால் தயாரிக்கப்பட்டு உத்தரவாதம் அளிக்கப்பட்ட அவர்களின் 'விற்பனைச் சரக்கு' மக்களின் நல்வாழ்வு என்பது தான்.

சில சமயங்களில் அபேட்சகர்கள் கல்லூரிப் பட்டதாரிகளாக இருப்பார்கள். இவர்கள் எப்பொழுதுமே சிறந்த தேசபக்தர்கள் என்ற 'லேபில்' பெற்றவர்கள். சிலர் முன்னாள் டெபுடிகள். சிலர் முன்னாள் மேயர்கள். சிலர் முன்னாள் மந்திரிகள். அபேட்சகர்கள் நிலையிது. தொகுதி மக்கள் பட்டதாரிகளன்று. அவர்கள் வெறும் மக்களே. அரசியலில் 'வாக்காளர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள்.

தேர்தல் காலங்களில் மக்கள் ஓட்டளிக்கும்போது, மக்கள் அபேட்சகர்களால் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறார்கள். அபேட்சகர்கள் ஓட்டுகளைத் திரட்டவரும் சில வாரங்களுக்கு, நாட்டில் ஒரு அமைதியிழந்த ஆரவாரமான சூழ்நிலை நிலவும். இச்சூழ்நிலை, பலருக்கு கூட்டையுடைத்துக்கொண்டு வெளிவரும் ஒரு கடும்புலியைப்போல் காட்சிதரும். "நாட்டில் என்ன நடக்குமோ?' என்று அரசியல்வாதிகளெல்லாம் பீதிகொள்வர்.

ஆனால் தேர்தல் நாள் வந்துற்றதும், நாடு மறுமுறையும் ஒரு புதிய கூட்டிற்குள் தள்ளப்பட்டுவிடும். சாதாரணமாக, அது விரிவான, நன்கு தயாரிக்கப்பட்ட ஒரு அரசாங்கக் கூட்டிலேயே தள்ளப்படுவது வழக்கம்.

இதில் இருந்து இன்னும் நான்காண்டுகளுக்கு அந்தக் கூண்டை அரசியல் வாதிகள் ஆட்டிப்படைப்பார்கள்.

-கோ. கோதண்டராமன்

ஜான்ஸி ராணி!

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த கனம் காமராஜர் அவர்கள் குதிரையின் கனைப்புச் சப்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனார். அவர் முன்னால் வெண்புரவி ஒன்று நின்றுகொண்டிருந்தது. அதன்மீது அழகான இளமங்கையொருத்தி உட்கார்ந்திருந்தாள். அவள் உடலில் பட்டாடை; தலையில் கிரீடம்; கையில் உருவிய வாள்!

"யார்...நீ...?உம்....என்னை....எதுக்காகக்....கொல்லப்பாக்கிறே?" என்று தனக்கே உரித்தான பாணியில் திக்கித்திணறிக் கொண்டே கொச்சைத் தமிழில் கேட்டார் அந்தப் பச்சைத் தமிழர்!

"நான் உங்களைக் கொல்ல வரவில்லை" என்று புன்முறுவலுடன் பதிலளித்தாள் அம்மங்கை. அவள் அப்படிச் சொன்னபோதிலும், தன்னெதிரில் அவள் நிற்பதே தன்னைக் 'கொல்லுவதாகக்' கருதினார் காமராஜர்!

"நான்தான் ஜான்ஸிராணி!" என்று மேலும் தொடர்ந்தாள் அப்பெண்மணி.

"ஜான்ஸி ராணின்னு...ஒரு...சினிமாப்படம் வந்துதே!... அதுலே...நீ...நடிச்சிருக்கியா?"

"நான் நடிகையல்ல; நாடாண்டவள்! உங்களைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாயிருந்தது..."

"அடடே! நம்மைப் பார்க்கக்கூட ஒரு பெண்ணுக்கு ஆசை வந்திருக்கே!" என்று ஆச்சரியத்தில் மூழ்கிப்போய் அசட்டுச் சிரிப்புச் சிரித்தார் காமராஜர்.

அவர் சிரித்த முகத்தைப் பார்க்கச் சகியாத ஜான்ஸி ராணி வேறுபக்கம் தலையைத் திருப்பிக்கொண்டு, "ஏன் பேசாமலிருக்கிறீர்கள்? பிரம்மச்சாரி ஒரு பெண்ணுடன் பேசலாமா என்று நினைக்கிறீர்களா?" என்று வினவினாள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே...!"

ஜான்ஸி ராணி லட்சுமிபாய் விழுந்து விழுந்து சிரித்தாள்.

"என்ன உளறுகிறீர்கள்?"

"நான் எப்பவுமே அப்படித்தான்...நீ வந்த விஷயத்தைச் சொல்லு."

"இந்திய சுதந்திரப் போராட்ட நூற்றுண்டு விழாக் கமிட்டிக்கு நீங்கள்தான் தலைவராமே?"

"ஆமா....அதுக்கென்ன?"

"அந்த சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"ஓ! நல்லாத் தெரியுமே...நூறு வருஷத்துக்கு முன்னாலே சுதந்திரத்திற்காகப் போராட்டம் நடத்தினாங்களாம்!"

"அப்புறம்?"

"அவ்வளவுதான்!"

"அவ்வளவுதானா?...நீங்கள் சரித்திரம் படித்திருக்கிறீர்களா?"

"கேலியா பண்றே? நான் அவ்வளவு படிச்சவனல்லன்னு உனக்குத் தெரியாது...?"

"மன்னிக்க வேண்டும். தமிழ் நாட்டின் முதன் மந்திரியாயிற்றே என்று கேட்டேன்."

"அதுவும் தப்பு. நான் சென்னை ராஜ்ஜியத்திற்குத்தான் முதல் மந்திரி...தமிழ்நாட்டுக்கல்ல!"

"மறந்துவிட்டேன். சென்னை ராஜ்ஜியத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயர் கூடாது என்று சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய 'பச்சைத் தமிழன'ல்லவா நீர்?"

"யாரு சொன்னது நான் பச்சைத் தமிழன்னு? அதெல்லாம் பச்சைக்கும், சிவப்புக்கும் வித்தியாசந் தெரியாத கருப்புச் சட்டைங்க பேசறது...அது போவட்டும்...என் உள்நாட்டு விஷயத்தைப் பத்திப் பேசறதுக்கு நீ யாரு?"

"நானா? நான் ஒரு வடநாட்டுக்காரி!"

"ஆ!.....ஐயையோ!.....அப்படியா?....அப்படியானா....சரிதான்! நீங்க எது வேணுமானாலும் பேசுங்க...நான் எதுவுமே பேசலே...!

"சரி! இன்னும் சில நாட்களில் சுதந்திரப் போராட்ட நூற்றுண்டு விழா கொண்டாடப் போகிறீர்களல்லவா? அதை உடனே கைவிட்டு விடவேண்டும். ஏனென்றால், அது சுதந்திரம் வாங்குவதற்காக நடத்தப்பட்ட போராட்டமல்ல. நாடு சுதந்திரம் அடையவேண்டுமென்பதற்காகவும் நாங்கள் அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை!"

"ஓ? ஹாகோ! அந்த ஜான்ஸி ராணியா நீங்க? நாங்கூடக் கேள்விப்பட்டிருக்கேன்."

"அந்தப் போராட்டத்தில் நான் ஏன் கலந்துகொண்டேன் தெரியுமா? டல்ஹௌஸி என் ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டான். அதைத் திருப்பி அடைவதற்காகத்தான் ஆங்கிலேயரை எதிர்த்தேன். நானா சாஹிப்பைத் தெரியுமா?"

"நானா சாஹிப்?"

"நீங்கள் சாஹிப்பல்ல! பாஜிராவினுடைய தத்துப்பிள்ளை 'நானா சாஹிப்!' அவனுக்குத் தரவேண்டிய உபகாரச் சம்பளத்தை ஆங்கிலேயர் நிறுத்திவிட்டனர். அதனால்தான் அவன் போராட்டத்தில் குதித்தான். இதேபோல்தான் அவுத்பேகம், பகதூர்ஷா ஆகிய எல்லோருமே!"

"எல்லோருமே சுயநலத்துக்காகத்தான்..."

"ஏன் தயங்குகிறீர்கள்? சந்தேகமில்லாமல் நாங்கள் சுயநலத்திற்காகத்தான் போராடினோம்.

"நீங்களெல்லாம் சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட தியாகிங்கன்னு எங்க நேரு சொல்றரே?"

அவரு சொல்வாரு! நான் வரட்டுமா?

குதிரை பறந்தது; காமராஜரின் கனவும் கலைந்தது!

—ஏ. பெரியசாமி

தீ!

தென்னரசு

நெடுநாட்களுக்குப் பிறகு இந்தியத் துணைக்கண்டத்தையே ஏககாலத்தில் வருந்தச் செய்யும் வாய்ப்பு ஒன்றை நேற்று முன்தினம் மத்திய நிதியமைச்சர் அளித்திருக்கிறார். கடந்த இரண்டு நாட்களாக ஒவ்வொருவரும் அவரைப் பற்றியே 'பாமாலை' பாடிக்' கொண்டிருக்கிறார்கள்.

இதுமாதிரி வாய்ப்பு 'தளகர்த்தர் டயரு'க்குக்கூடக் கிடைத்ததில்லையென்று அனுபவமிக்கவர்கள் கூறுகிறார்கள்!

'பட்ஜட்' என்றால் என்ன என்று பெரும்பாலோருக்குத் தெரியாமலிருந்தது. சென்ற புதன்கிழமைக்குப் பிறகு, பட்ஜெட் என்றால் பேயோ, பூதமோ, கடல் கொள்ளைக்காரனோ, நிவட்டித்திருடனோ என்று பாமரர்கள் நினைக்கும் வகையில், மந்திரி 'கிரைப்வாட்டர்' கிருஷ்ணமாச்சாரியவர்கள் பட்ஜட்டை இந்தியத் துணைக்கண்டத்திற்கு அறிமுகப்படுத்திவிட்டார். அவர் வாழ்க! அவர் 'நாமம்' அழியாதிருக்க!

ஜனநாயகம் என்கிறார்கள்; குடியரசு என்று 'பஜனை' நடத்துகிறார்கள்; . அபார சாதனை அத்தனையும் ஆண்டவன் சித்தம் என்ற ஆலாபம் தவறாமல் சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெறுகிறது. ஆனால் பட்ஜெட் மட்டும், மன்னராட்சியை வைத்துக்கொண்டிருக்கும் மேலைநாட்டு அடிச்சுவட்டிலிருந்து ஒரு அணுவும் பிறளாமல் போடப்பட்டிருக்கிறது. பட்ஜெட் போடுவதற்கு எந்த ஆட்சியைப் பின்பற்றினால் என்ன என்பார்கள்! அவர்கள் அரசியல் ஆக்கமன்றத்தை போலீஸ் ஸ்டேஷனாகக் கருதிக்கொண்டிருப்பவர்களாகவே இருக்கக்கூடும். அடிக்கு பயந்து, மிரட்டலுக்கு நடுங்கி மனச்சான்றைக் கொன்றுவிட்டு போலீஸ்காரனின் விருப்பப்படி தலையாட்டும் போலீஸ் ஸ்டேஷனல்லவே அரசியலும், அதை நிர்வகிப்போரும்! ஒரே கலாச்சாரத்தைக் கொண்ட நாட்டில் வெற்றி தேடித்தரும் ஜனநாயகம், பல கலாச்சாரங்களைக் கொண்ட இந்தியத் துணைக்கண்டத்தில் எங்ஙனம் வெற்றி பெறமுடியும் என்ற வாதம் வலுத்துக்கொண்டு போகையில், அந்த உளுத்துப்போன ஜனநாயகவாதிகளின்—பிரிட்டிஷ் பட்டுமுடிக்காரர்களின் நாட்டு நிலைப்படி வகுக்கப்பட்ட பட்ஜட்முறை இந்த ஏழைக் கண்டத்தினருக்கும் எவ்வாறு பொருந்தும் என்பதை டி. டி. கேக்கு ஆராய நேரமில்லை போலும்! முதலாளி அவர்! மந்திரி பதவி போக சொந்தத்தில் பல தொழில்கள் உண்டு அவருக்கு!

இந்தியத் துணைக்கண்டத்துச் செப்பனீடு வேலையில் இதுவரை எத்தனையோ அரசியல் கொத்தனார்கள் ஈடுபட்டிருந்திக்கிறார்கள். இதுபோல்-டி. டி. கே.யைப் போல் புரட்சிகரமான 'பட்ஜட்' கொண்டுவந்தவர்கள் யாருமே இல்லை. நாமா சொல்லுகிறோம்? காங்கிரஸ்காரர்களே கண்ணீர் வடிக்கிறார்கள்.

ஞானி குருமுக் சிங் என்ற காங்கிரஸ் உறுப்பினர் 'இது மக்கள் மீது சுமத்தும் பெருஞ்சுமை' என்கிறார்.

'தலையைச் சுற்ற வைக்கிறது' என பிரோஸ் காந்தி என்ற காங்கிரஸ்காரர் கண்டித்திருக்கிறார்.

வேறு சிலர்-மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்கள் 'மூன்று மாதங்களுக்கு முன்பே இந்த பட்ஜட் வந்திருந்தால் காங்கிரஸ் இன்று அதிகார பீடத்தில் இராது' என்று குரல் எழுப்பியிருக்கின்றனர்.

—இந்த அளவுக்கு டி. டி. கே. சமர்ப்பித்த பட்ஜெட்டிற்கு மகத்தான எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. பாராளு மன்றத்தில்கூட சில விசைப் பொம்மைகள் இருக்கின்றன. டி. டி. கே யின் பட்ஜெட் திர மிக்க வீரப் பயணம் என்று கைதூக்கியிருக்கிறார்கள். அவர்களையும் மக்கள் தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்கிற போது நெஞ்சு கொதிக்கிறது. கலப்பு ஜனநாயகத்தின் ஓட்டை உடைசல்கள் நம்முன்னே வந்து குதிக்கின்றன.

திட்டமிட்ட வருவாய்க்கு ஏற்றவாறு வரிகளை விதித்திருக்கும் டி. டி. கே. அவர்கள், எந்த வர்க்கத்தினர் அதிக அளவுக்குப் பாதிக்கப்படுகின்றனர் என்பதை ஆராய்ந்து பாக்கவேண்டும். ஏறக்குறைய பதினைந்து கோடி ரூபாய்தான் பணக்காரர்கள் மூலமாக சர்க்காருக்குக் கிடைக்க வழியிருக்கிறது. அதிலும் அத்தனை பேரும் நேர்மையாக நடந்து கொண்டால்தான் அந்தக் குறிப்பிட்ட ரூபாயும் சர்க்கார் கைக்குக் கிட்டும். மிகுதி தொகை அனைத்தும் ஏழைகளிடமிருந்து கிடைக்கக்கூடியதாகவே பட்ஜட் அமைந்திருக்கிறது. ஏழைகள் கூக்குரலிட்டால், 'அதோ அதோ! பணக்காரர்களுக்கும் தான் போட்டிருக்கிறேன்' என்று கூறித் தப்பித்துக் கொள்வதற்கும், பணக்காரர்கள் மிரட்டினால், ஏழைகளைக்கூட விட்டு வைக்கவில்லை என்று சமாதானம் கூறுவதற்கும் ஏற்ற வகையில் டி. டி. கே. திட்டத்தைத் தீட்டியிருந்தாலும், பெரும் பகுதி ஏழைகள்தான் பட்ஜெட் நெருப்பில் பலியாக இருப்பவர்கள்கள் என்பது அவருக்குத் தெரியாமலில்லை.

போடப்பட்டிருக்கும் 'எக்சைஸ்' வரிகளுக்கு அகப்படாமல் வாழ பணக்காரர்களுக்கு வசதியிருக்கிறது. வழிகள் இருக்கின்றன. ஆனால் அடுப்புமூட்டித்தான் ஆகவேண்டிய ஏழைகள், மண்ணெண்ணெய்விளக்கு ஏற்றித்தான் தீரவேண்டிய குடும்பங்கள் பட்ஜெட் பேயிடமிருந்து தப்பவே மார்க்கமில்லை.

பாமரர்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் புகுந்திருக்கும் உறுப்பினர்கள், ஏறுவதற்கு உதவியாக இருந்த ஏணிகளை உதைத்துத் தள்ளி விடாமல், மெஜாரிடி பலத்தை வைத்து பட்ஜெட்டை நிறைவேற்றி விடாமல் நீதியோடு, நடந்துகொள்ளக் கேட்டுக்கொள்கிறோம். கட்சியல்ல இங்கே முக்கியம். மக்களை மனதில் கொண்டு காங்கிரஸ் உறுப்பினர்கள் காரியமாற்றினால் ஜனநாயகத்திற்கு உயிர் கொடுத்தவர்களாவார்கள். காங்கிரஸ் கட்சியின் பட்ஜெட் மெஜாரிடி பலத்தால் வென்றது என்று பெயரெடுப்பதைக் காட்டிலும், காங்கிரஸ் உறுப்பினர்களே காங்கிரஸ் மந்திரி சமர்ப்பித்த பட்ஜெட்டைத் தோல்வியுறச் செய்தார்கள்-என்ற புகழ்தேடிக் கொள்வதே சிறந்ததாகும். செய்வார்களா காங்கிரஸ் உறுப்பினர்கள்? ராஜ கட்டம் பக்கத்திலே தானிருக்கிறது; அதையும் காங்கிரஸ் உறுப்பினர்கள் மறந்து விடக் கூடாது ★

தமிழ்நாட்டு எம். பி. க்களே! இதற்கென்ன சொல்கிறீர்கள்?

"இவர்களுக்கா ஓட்டுப் போடப் போகிறீர்கள்? இவர்கள் ஆட்சிக்கு வந்தால் கோயிலை இடித்து விடுவார்களே!"

"ஐயய்யோ! இவர்கள் பச்சை நாஸ்திகர்கள்! இவர்கள் எம். எல். ஏ. க்களானால் கோயிலையே நாடகக் கொட்டகையாக்கி விடுவார்கள்."

—சாதாரண காலங்களில் அடக்கமாக நடந்துகொண்ட பெரிய காங்கிரஸ்காரர்கள்கூட தேர்தல் காலத்தில் இவ்வாறு கீழ்த்தரமாகப் பேசினார்கள். எந்தத் தொகுதியில் யார் யார் போட்டியிட்டாலும், கழக அபேட்சகரை மட்டும் மேடைக்குத் தலைப்பாக எடுத்துக்கொண்டு போட்டி அபேட்சகர்கள் பிரச்சாரம் செய்ததைத் தமிழகம் இன்னும் மறந்திருக்காது.

காங்கிரசார் கம்யூனிஸ்டுகளைத் தாக்கவில்லை. கம்யூனிஸ்டுகள், தங்களைக் காங்கிரசின் 'பங்காளி' என்று கூறிக்கொள்வதிலே பெருமைப்பட்டார்கள். இரு சாராருமே தனித்தனி மேடை போட்டுக் கழக அபேட்சகரையே தாக்கிப் பேசத் தலைப்பட்டார்கள். தாக்கிப் பேசினார்கள் என்றால், நாட்டுப் பிரிவினை தவறு என வாதித்தார்களா? இல்லை.

"வடநாடு, தென்னாட்டைப் புறக்கணிக்கிறது' என்பது தவறு என்று விளக்கினார்களா? இல்லை.

'கோயிலை இடிப்பவர்கள்! குளத்தைத் தூர்ப்பவர்கள்' என்ற இரண்டு கோஷங்களைத்தான் அவர்கள் திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். மக்களின் மூடநம்பிக்கையைப் பயன்படுத்திக் கொள்ள அந்தப் 'புத்திசாலி'கள் அவ்வளவு பிரயத்தனப்பட்டார்கள்! ஆனால் என்ன இப்பொழுது நடந்திருக்கிறது? டில்லிப் பாராளுமன்றக் கூட்டத் துவக்கத்தன்று தமிழ்நாட்டு எம். பி. க்களில் பெரும்பாலோர் கடவுளின் பெயரால் பிரமாணம் எடுத்தார்களாம்! வடநாட்டு எம். பி. க்கள் யாருமே கடவுளைச் சந்திக்கு இழுக்கவில்லையாம்! தமிழ்நாட்டு உறுப்பினர்களின் தன்னம்பிக்கையற்ற தன்மையைக் கண்டு அங்கிருந்த மந்திரி ஒருவர் கேலி செய்தாராம்! பத்திரிகைகளெல்லாம் கட்டம் கட்டிப் போட்டிருக்கின்றன. 'கடவுள் இப்போது தென்னாட்டுக்குப் போய் விட்டார்' என்று அந்த வடநாட்டு மந்திரி இடித்துரைத்திருக்கிறார். தமிழ்நாட்டு எம். பி. க்கள் இதற்கென்ன சொல்கிறார்கள்? கடவுளையும், தென்னாட்டு மக்களின் கடவுட்பக்தியையும் கிண்டல் செய்த டில்லி மந்திரி நாஸ்திகரா? கடவுளைப் பதவிப்பிரமாணத்திற்கு இழுக்காத வடநாட்டு எம். பி. க்கள் அனைவரும் 'விக்ரக நிக்ரகர்'களா?

ஐயோ! மானம் போகிறது. அறிவுலகு சிரிக்கிறது. ★

“சென்னைக்கு தமிழ்நாடு என்று பெயர் வையுங்கள்”

பாராளுமன்றத்தில் தோழர் ஈ. வி. கே. சம்பத் திருத்தம்

புதுடெல்லி மே 13: “தமிழ் பேசும் மக்கள் அனைவருடைய விருப்பப்படியும் சென்னை அரசுக்கு ‘தமிழ்நாடு’ எனப் பெயர் வைக்கத் தவறியது பற்றி வருந்துகிறோம்”- என குடியரசுத் தலைவரின் பேருரைக்குத் தோழர் ஈ. வி. கே, சம்பத் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இது, விரைவில் பாராளு மன்றத்தில் வாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஈ. வி. கே. சம்பத் டில்லி முகவரி:—

ஈ. வி. கே. சம்பத்,
140, கான்ஸ்டிடியூஷன் அவுஸ்
(Constitution House), புது டெல்லி.

இலங்கை அரசியலில் மூக்கறுபட்டு மூலையில் உட்காரவைக்கப்பட்ட தோழர் **கோத்தவரங்காய்** (கொத்தலாவாலே) சிங்கள மொழி காக்கச் சீறி எழுந்துள்ளார். “தமிழை அடியோடு ஒழிக்கவேண்டும்” என மார் தட்டிக் கூறுகிறார்! புதிய பிரதமர் பண்டாரநாயகா, வாய்ப்பேச்சில், “நியாய அளவில் தமிழ் பயன்படுத்தப்படும்” என்று கூறியதைப் பலமாகக் கண்டிக்கிறார்.

தமிழ்நாட்டுத் தமிழ் மந்திரிகள் வெறும் ‘இட்லி சாம்பார்’ பொட்டலங்களாக இருப்பதாலும், வடநாட்டிலுள்ள நேரு சர்க்கார் ‘சப்பாத்திமலை’யாக இருப்பதாலும், சுண்டைக்காய் இலங்கையின் வெண்டைக்காய் வீரர்கள் துள்ளிக்குதிக்கிறார்கள். இருபது லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்களின் எதிர்காலம் இருளில் கிடக்கிறது. பச்சைத்தமிழர் இங்கே ஒன்பது ரூபாய் நோட்டாக உட்கார்ந்திருக்கிறார்.

எங்கணும் சிங்களம்! எல்லாம் சிங்களம்! தமிழ் கூடாதாம்! “ஐயா! தமிழ்நாட்டு பிடி சுருட்டு நிதியமைச்சரே! உமது வீரதீர சூரப்பிரதாபங்களை கொஞ்சம் அவிழ்த்துவிடுமேன்! கர்ச்சனை செய்யுமேன்! ஏன? அதற்கு அதிகாரம் இல்லையோ? நீர் வெறும் சோற்றாலடித்த பிண்டந்தானே?”-இப்படிக் கேட்கத் தோன்றும் தமிழர்களுக்கு!

“ஐயா முதலமைச்சரே! தமிழ் தள்ளப்படுகிறது இலங்கையில்! தமிழ்-அப்படி ஒரு மொழி இந்த “சென்னை ராஜ்ய”த்தில இருக்கிறது. அதைப் பேசுவோர் தான் தமிழர் எனப்படுவோர். அந்தத் தமிழுக்கும் தமிழருக்கும் ஆபத்து. உமது பச்சை வாயைத் திறந்து, பச்சையாக ஒரு வார்த்தை சொல்லுமே? ஏன், முடியாதோ? அதிகாரமில்லையா? அட ஓ! “டண்ணுருட்டிப் பொம்மை பச்சைவர்ணம் பூசிக்கிட்டுக் கண்ணுருட்டிப் பார்க்கிறதோ?”-இப்படிப் பேசத் தோன்றும் தமிழர்களுக்கு!

வீராதிவீர, வீரப்பிரதாப, ஆசியாவின் சோதி, இந்தியாவின் நாதி, ரஷ்யாவின் குத்துவிளக்கு, அமெரிக்காவின் அரிக்கன் விளக்கு, சமாதானப் புறு, அணுகுண்டு எதிர்ப்பு அஞ்சா நெஞ்சன், மூச்சுப்பிடிக்க மூன்று மணி நேரம் முழங்கும் முற்போக்கு வாதி, டண்டித டண்டித நேருஜீ...ஜீ......ஜீ இலங்கையில் விருந்துண்ணப்போகும் எழிலரசரே! வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்தமிழ் கூறும் நல்லுலகின் தமிழ் பேசும் மக்கள் உமது பாரதத்தாயின் கால்வழி வந்தவர்கள் என, காசு வழிவந்த காங்கிரசு எம். எல். ஏக்கள் கதறுகிறார்களே! உமது நூல் வழித் தோன்றும் அந்த இனத்தில் கால்வாசி, தென்ஆப்பிரிக்காவிலும் இலங்கையிலும் பர்மாவிலும் மலேயாவிலும் துடியாய்த் துடிக்கிறதே! காணக் கண்ணில்லையா? சீச்சீ! நீர்தான் உலக மகா புருஷராயிற்றே! கொஞ்சம் கடைக்கண்ணைத் திறந்து கருணை காட்டக்கூடாதா? இன்னும் உம்மை நம்பி இருக்கும் இளிச்சவாய்த் தமிழனுக்கு வாய்திறந்து ஒரு வார்த்தை வழங்கக்கூடாதா? பரம்பரையாக, ஏமாந்து கிடக்கும் பாழாய்ப் போன தமிழனை உம்மவர் ஏமாற்றுவதைப் பொறுக்கச் சொல்கிறார்கள் இந்த நாட்டு ‘பதவி பொறுக்கி’ காங்கிரசுக்காரர்கள்! பொறுக்கிறோம் ஐயா! மற்றவன் ஏமாற்றுவதையாவது தடுக்கக்கூடாதா? நீர் இலங்கையில் பண்டாரநாயகாவோடு தமிழரைப் பற்றிப் பேசமாட்டீர் என்றும், அணுகுண்டைப் பற்றித்தான் பேசுவீர் என்றும் செய்தி வந்ததும் எங்கள் கோமாளித் தமிழன் பதறிப் போனானே!

இமயமலை அளவு உயர்ந்து விட்ட ரோஜாமுகத்து ராஜாவே! உலக அரங்கில் உமது அணுகுண்டு எதிர்ப்பை! எவனாவது லட்சியம் செய்கிறானா? ஏதோ அப்பாவிப் பிள்ளை ‘ஐயோ-ஐயோ! என்கிறது!-என்றல்லவா கேலி செய்கிறார்கள். ரஷ்யாக்காரனும் அமெரிக்காக்காரனும் வெடித்துக்கொண்டே இருக்கிறானே! நமது பங்காக நாமும் பயமுறுத்த ஒரு வெங்காய வெடி கூட நம்மிடம் இல்லையே! அப்படி இருக்க, நாம் மனித நாகரிகத்தைப் பற்றிப் பேசினால் கையாலாகாத்தனம் என்று தானே கருதுவார்கள்!-உமக்கு ஏன் இந்த வீண் வேலை. தூங்கி வழியும் தமிழனைக் கொஞ்சம் கவனியுங்கள் ஐயா! இங்கே காமராசர் முகத்தில் பச்சை பூசி ஒளியாக்கப் பார்க்கிறார் ஈ. வே. ரா. அவர் முகத்தில் கரி பூசி தன் மாதிரி அசல் ஆக்கப் பார்க்கிறார் காமராசர். இந்த நிலை தான் நடக்கிறது. கொத்தவரங் காய்களும் பண்டாரங்களும் இலங்கையில் தமிழனைப் படுத்துகிற பாட்டை எடுத்துக் கூற நாதியில்லை. ஐயா பண்டிதரே! குறைந்த பட்சம் இந்த நன்மையையாவது தமிழனுக்குச் செய்யக் கூடாதா?”-என்று பேசத் தோன்றும் தமிழர்களுக்கு!

யார் பேசி என்ன! கல்லுப் பிள்ளையார் கடலை உருண்டை தின்ன விட்டாலும் பக்தன் வழங்கிக்கொண்டே இருப்பது போல், பேசிக்கொண்டே இருக்க வேண்டியதுதான்!

அட தமிழா! இளித்த வாய்த் தமிழா! ஏமாந்த தமிழா! உன் நாடு உனக்கு ஆகும் வரை நீ உருப்பட முடியாது என்பதை எப்போது உணர்கிறாயோ அப்போது தான் உனக்கு கதி மோட்சம்!

சே! நேருசிக்கு சே!
மொரார்சிக்கு சே!
பந்த்சிக்கு சே!

எல்லா சிக்கும் படைத்த தமிழா! எல்லா ‘சி’க்கும் ஜே! போடு!

புதிய தமிழ் நாடு!

செந்தமிழ் நாடெனும்
போதினிலே—ஒரு
தேள் வந்து கொட்டுது
காதினிலே—எங்கள்
மந்திரி மார் என்ற பேச்சினிலே
கடல்—மண்ணும் சிரிக்குது
பிச்சினிலே!

குழந்தையைக் கொல்லும்,
தமிழ் நாடு—பசிக்
கொள்கை படைத்த தமிழ்நாடு
—வெறும்
இலந்தைப் பழந்தின்று
வாழ்வதிலே—ஒரு
ஈடிணையற்ற தமிழ்நாடு

காவிரிதென்பெண்ணை
பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை
பொருனை நதி—என
மேவிய ஆறுபல விளிலும்
— உயர்
வெள்ளை மணல் கொண்ட
தமிழ் நாடு

நீலத்திரை கடல் ஓரத்திலே
—நின்று
நித்தம் தவஞ் செயும் குமரிகளே
—வட
மாலவன் குன்றம் தனில் ஏறி
—தலை
மழுங்கச் சிரைக்கும் தமிழ்நாடு

கல்வி சிறந்த தமிழ்நாடு—காம
ராசர் பிறந்த தமிழ்நாடு
—நல்ல
பல்வித கேசுகள் பேப்பரிலே
—வர
பாரெங்கும் நாறும் தமிழ்நாடு!

வள்ளுவன் தன்னை உலகி
னுக்கே—தந்து
உள்ளதும் கெட்ட தமிழ்நாடு
—கொலை
கொள்ளை யெனும் மிக
நல்ல தொழில்களைக்
குறைவறச் செய்யும் எழில்நாடு!

சிங்களம் புட்பகம் சாவக
—மாதிய
நிவு பலவிலும் சென்றேறி
—அங்கு
எங்கணும் தேயிலைத்
தோட்டத்திலே - கொடி
ஏற்றி வளர்ப்பவர் தாய்நாடு!

விண்ணை இடிக்கும் தலை இமயம்
—எனும்
வெற்பை இடிக்கும் திற
னுடையார்—திலம்
தொலைந்து பிடித்து தெருவினிலே
—நல்ல
சோற்றுக் கலையும் புகழ் நாடு!

குறள்

காமராசர் வாழும் கன்னித்
தமிழ் நாட்டின்
நாமமே வாழ்க நலிந்து!

-வணங்காமுடி

ஜூலை 13ம் தேதியிலிருந்து
தென்றல்
வெண்பாப் போட்டி,
கேள்வி பதில், தொடர் கதை
மற்றும் பல புதிய அம்சங்களுடன்
பனிரெண்டு பக்கங்களாக வெளிவரும்.
விலை 0-2-6 (16 காசு)

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ் நாடு